**திம்புலாகல பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 அக்தோபர் 18 ஆந் திகதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை. அத்துடன் முன்னைய இரண்டு வருடங்களுக்காக நிதிக்கூற்றுக்களும் இதுவரை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் சபையில் கொடுக்கல் வாங்கல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 அக்தோபர் 12 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 ஜுன் 30 திகதி வரை பதில்கள் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 50,193,611 ஆகும்.

**(ஆ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 264 இன் பிரகாரம் பற்றுச் சீட்டுகள் அல்லது தொடர்புடைய ஆவணங்கள் பெற்றுக்கொள்ளாமல் 08 கொடுப்பனவு உறுதிச்சான்றுகளின் மூலம் ரூபா 79,720 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான நிருவாகம்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 14,704,147 ஆக இருந்ததுடன், அப் பணத்தினை அறவீடு செய்வதற்கான பொறுப்பு சொல்ல வேண்டிய சாராரினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.1.1 நிலுவை கடை வாடகையும் வாராந்த சந்தை வருமானமும்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான ஒரு வாராந்தச் சந்தை மற்றும் 20 கடைகளில் இருந்து ரூபா 405,932 இற்கான நிலுவை வருமானமொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அந்த நிலுவைத் தொகையினை உடைய கடைகளில் இருந்து 01 வருடம் முதல் 08 வருடம் வரையான காலப் பகுதியில் கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) வேலைகள் பகிர்வு, உள்ளகக் கட்டுப்பாடு, உள்ளக மேற்பார்வை ஆகிய உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கு முரணாக செயற்பட்டு சபையின் கொள்வனவு விடயங்கள் தலைவரினால் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 திகதிக்கு முன்னர் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் கணிப்பீடு ஒன்றின் மூலம் கடைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட பட்டோலையின் அடிப்படையில் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் கைத்தொழில் வரி அறவிடப்பட வேண்டுமெனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(இ) 2-3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வருமான நிருவாகம் உத்தியோகத்தர் ஒருவர் பெற்றிருந்த 17 அடியிதழ்கள் (பற்றுச்சீட்டுகள்) புத்தகங்களின் அடியிதழ்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 132(ஓ) மற்றும் (ஔ) பிரிவுகளின் பிரகாரம் மற்றும் நி.பி.343 இன் பிரகாரம், திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான நடைமுறைக் கணக்கில் 2015 நவம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களை மிகைத்துள்ள ரூபா 997,573 தொகை பெறுமதியான 108 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் செயற்பாட்டு கோவைக்காக 28 ஆம் இலக்க மேலதிகத்தில் வழிகாட்டல் 3.5, 3.6 இன் பிரகாரம் ரூபா 200,000 இற்கு மிகையான திருத்த வேலைகளுக்காக உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அவ்வாறான அங்கீகாரமின்றி மற்றும் 1990 அக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகளின் நியாயமான தன்மை பற்றிய அரச திணைக்களம் ஒன்றின் அல்லது சபை ஒன்றின் தகைமையுள்ள இயந்திர பொறியியலாளர் ஒருவரின் அறிக்கையினை பெற்றுக்கொள்ளாமல் சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்றின் திருத்த வேலைக்காக பிரதேச சபை நிதியத்திலிருந்து ரூபா 561,700 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்ததுடன் அந்த திருத்த வேலை சபை தலைவரின் ஏகமனதான தீர்மானத்தின் படி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபை (நிதி நிருவாக) விதி இலக்கம் 113 இன் பிரகாரம் ஒப்பந்த வேலைகள் தொடர்பாக இறுதி கொடுப்பனவு அல்லது திருத்தி வைத்தல் பணம் செலுத்தும் போது குறிப்பிட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும், அது சிறந்த முறையில் மற்றும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் அவ்வேலை தொடர்பாக குறிப்பிட்ட விடயத்திற்கு பொறுப்பான அலுவலரிடம் பெற்றுள்ள சான்றிதழ் ஒன்று சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாகச் செயற்பட்டு 11 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் மூலம் ரூபா 3,358,871 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபை கலைக்கப்பட்ட பின்னர், தலைவரினால் பயன்படுத்தப்பட்ட கப் வண்டியின் திறப்பு செயலாளரின் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும். அத்துடன், எரிபொருள் வரையறை மாதாந்தம் 10 லீட்டர் ஆக வரையறுக்கப்பட வேண்டுமெனவும் 2015 மே 18 திகதிய வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் என்சீபீ/எல்ஜீ/ஏசீ/4/1/2 கொண்ட கடிதத்தின் படி அறிவுரை வழங்கியிருந்த போதிலும் தலைவர் பயன்படுத்திய கப் வண்டிக்கு 2015 ஜூன் முதல் 2015 நவம்பர் மாதம் வரை மேற்கூறிய எரிபொருள் வரையறையை மிகைத்து ரூபா 148,680 தொகை பெறுமதியான 1,652 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தியிருந்தார்.

(ஈ) திறைசேரி செயலாளரின் 2010 மே 22 திகதிய இலக்கம் PF-443 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்கள் தமது மாதாந்த எரிபொருள் தேவையின் படி கூட்டுறவு சங்கமொன்றில் வைப்புத் தொகை ஒன்று வைப்புச்செய்து அவ் வைப்புத் தொகையினை மிகைக்காத அடிப்படையில் எரிபொருள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், அதற்கு முரணாக செயற்பட்டு மனம்பிட்டி தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து பெற்றிருந்த எரிபொருளுக்காக ரூபா 1,940,499 தொகை மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(உ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 3.4 இற்கு முரணாக செயற்பட்டு 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி ரூபா 1,299,880 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த டெல் வகையைச் சேர்ந்த 10 கணனிகள் மற்றும் 02 ஐபேட்கள் அதற்காக கிடைக்கப் பெற்ற 10 கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை சபையின் சொத்துக்கள் என பொருட்பதிவேட்டில் பதிந்திருக்கவில்லை. அத்துடன் 2015 மே 02 ஆந் திகதி சபை கலைக்கப்பட்ட போது, மந்திரிமார்கள் அவ் உபகரணங்களை எடுத்துச் சென்றிருந்தனர். அவ் உபகரணங்களை திருப்பி சபைக்கு ஒப்படைக்கும் படி செயலாளர் குறிப்பிட்ட சாராருக்கு 2016 செப்தெம்பர் மாதத்தில் அறிவித்திருந்தார். 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்பட்டு தலைவருக்கு மற்றும் பிரதேச சபை மந்திரிமார்களுக்காக எரிபொருள், தொலைபேசி, காகிதாகிகள் மற்றும் உபசரணைப் படி ஆக மீளாய்வாண்டின் முதல் 04 மாதங்களுக்காக ரூபா 154,000 தொகையொன்று, சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான குறிக்கோளுக்காக சபைக்கு வழங்கியிருந்த நிதி ஏற்பாடுகளை அதற்கு முரணான கருமம் ஒன்றான சபை அலுவலகத்திற்கு 04 குளிரூட்டிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 530,600 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக பிரதேச சபை விதிக்கோவையின் விதி இலக்கம் 05 இற்கு முரணாக செயற்பட்டு முறையற்ற ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு சபைத் தலைவரினால் தனிப்பட்ட முறையில் இந்த குளிருட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.4 மனித வள முகாமைத்துவம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கோப்பு மற்றும் பதவியணியினர் விபரங்களின் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இனங்காணப்பட்டிருந்த ஆளணிக்கோப்பு எண்ணிக்கை பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்கள் | மிகைகள் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | 01 | - | - |
| மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| இரண்டாம் நிலை | 15 | 06 | 09 | - |
| ஆரம்ப நிலை | 33 | 60 | 03 | 30 |
| | 50 | 68 | 12 | 30 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டாம் நிலையைச் சேர்ந்த 5 அபிவிருத்தி அலுவலர் பதவிகள், தொழிநுட்ப அலுவலர் (சிவில்), நூலக அதிபர், வருமான பரிசோதகர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர் ஆகிய பதவிகளில் 04 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) ஆரம்ப நிலையைச் சேர்ந்த 28 வேலை/ வெளிக்கள தொழிலாளர்களும், அலுவலக உதவியாளர் பதவி ஒன்றும், சாரதி பதவி ஒன்றிலும் வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் காவலாளிகள், வேலை பரிசோதகர்கள் மற்றும் கன ரக வாகன இயந்திர இயக்குனர்கள் பதவிகள் ஆகிய 03 மிகையாக இருந்தன.

(இ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புரம்பாக தொழிலாளர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 15 பேர்கள் சேர்க்கப்பட்டு மாதாந்த சம்பளம் மற்றும் படிகள் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு தேவையான பதவியணியினரை தெளிவாக இனங்கண்டு அங்கீகரித்திருக்காமையால் அலுவலகத்தில் மற்றும் வெளிக்களத்தில் கடமை விடயங்கள் சரியான முறையில் நடைபெறாத நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் அத்தியாயம் ii இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீடு தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்படாமல் பாதீட்டு செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 53% இற்கும் 83% இற்கும் இடையே வீச்சில் செலவு முரண்கள் அவதானிக்கப்பட்டன.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதியில் 01/2014 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்டகால தூரநோக்குடன் பிரதேச சபை சட்டத்தில் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடையும் இலக்காகக் கொண்ட செயற்பாடுகளை அடங்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று, மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபை உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று அமைத்திருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டின் போது மாகாண உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைத் திணைக்களம் அல்லது வட மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்